(5) அலுவல் வரிசையில் மாறுதல்

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"மேலவை விதிகளின் 21 (3) விதியின்படி இன்றைய நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றுள்ள அரசின் சட்ட முன்வடிவுகளில் 4-வது இனமான 1975-ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன் வடிவு முதலில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

"மேலவை விதிகளின் 21 (3) விதியின்படி இன்றைய நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றுள்ள அரசின் சட்ட முன்வடிவுகளில் 4வது இனமான 1975 ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு முதலில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

7. அரசின் சட்ட முன்வடிவுகள்

(I) 1975 ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1975).

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: மேலவைத் துணைத் தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1975 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று நான் முன்மொழிகிறேன்.

மதுரை மாநகராட்சியின் நிர்வாகத்தைக் கவனிக்க 1-11-1974லிருந்து ஒரு தனி அதிகாரியை அரசு நியமித்துள்ளது, மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்ததே. இந்தத் தனி அதிகாரி தான் பதவியேற்ற ஆறு திங்களுக்குள் மாநகராட்சித் தேர்தலை நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்யப் பணிக்கப்பட்டு இருந்தார். தனி அதிகாரியின் பதவிக்காலம் 30-4-1975 உடன் முடிவு பெறுகிறது.

1-1-1975ல் இருந்து மேற்கொண்டு மறு ஆணை பிறப்பிக்கப்படும் வரை உள்ளாட்சி நிறுவனங்களின் தொகுதி, எல்லை முதலியவைகளில் எந்த வித மாற்றத்தையும் செய்யலாகாது என்ற தடை ஆணையை அரசு

@377 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.